## இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை - 2013

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நியம இல. 02

மீளாய்வாண்டின் போது நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றானது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாச்சல் போன்றவற்றை வெளிப்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆராய்ச்சிக்காக திறைசேரி மானியமாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 16,323,030 தொகை மற்றும் ஆண்டின் போது ஏற்பட்ட செலவினம் ரூபா 7,006,672 தொகையான காசுப்பெறுவனவுகளாகவும் கொடுப்பனவுகளாகவும் தனித்தனியாக இனங்காணப்படாமல் தேறிய விளைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை அகற்றியமையால் ஏற்பட்ட இலாபம் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட பணம் என்பன கவனத்தில் கொள்ளப்படாமல் தேறிய விளைவு காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீடு செய்வதிலுள்ள வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 157,741 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய காலப்பகுதிக்குரிய மூலதன மானியம் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட பிழைகளைச் சரிசெய்தல் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பிழையான கணிப்பீட்டின் காரணமாக மேலும் சபை நிதியக் கணக்கு, நன்கொடைக் கணக்கு மற்றும் திரண்ட பற்றாக்குறை முறையே ரூபா 9,928,638, ரூபா 541,785 மற்றும் ரூபா 4,909,826 அதிகரித்தும் திறைசேரி ஆராய்ச்சி மானியக் கணக்கு ரூபா 5,560,597 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

போட்டியாளர் உடன்படிக்கை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் இதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து ரூபா 659,131 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமநல ஆராய்ச்சிக் கொள்கைச் சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 4(1) ஆம் பிரிவு | சபைக்காக பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக இருக்கவேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக இருந்தது. |
| (ii) 4.1 (அ) பிரிவு | கமநல ஆராய்ச்சி விடயம் அல்லது கமநல ஆராய்ச்சி தொடர்பான ஏதாவது விடயங்கள் அல்லது பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும், கமநல அமைச்சின் மேலதிக செயலாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (iii) 4(1)(ஈ) மற்றும் (க) பிரிவுகள் | நிரந்தர பயிர்கள் தொடர்பான கமநல ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளரான ஒருவர் அல்லது அவ்வாறான நிறுவனத்தின் கமநல ஆராய்ச்சி தொடர்பான பொறுப்புக்களை ஆற்றுகின்ற ஒருவர் மற்றும் சபையின் சிபாரிசுடன் விஞ்ஞானரீதியான ஆராய்ச்சியிலும் முகாமைத்துவத்திலும் நிபுணத்துவம் உடையவராக நியமிக்கப்பட்ட ஒருவர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 7(4) ஆம் பிரிவு | தலைவரின் பதவிக்காலம் 03 வருடங்களாக இருக்கவேண்டிய போதிலும் 2010 மே 12 ஆந் திகதி நியமிக்கப்பட்ட தலைவரின் நியமனக் கடிதத்தில் பதவிக்காலம் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 771 | மீளாய்வாண்டின் போது பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியதாக இனங்காணப்பட்ட கொள்விலை ரூபா 733,564 தொகையான கணனி, அலுவலகத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் இருப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 3,909,295 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,285,498 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,376,203 இனால் குறைவடைந்திருந்தது. அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 4,797,247 இனாலும் அரசாங்க மானியத்திற்கான காலக்கழிவு ரூபா 3,053,942 இனாலும் அதிகரித்தமை மற்றும் நிருவாக மற்றும் நிதிச் செலவினம் ரூபா 3,864,010 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் 13 குழுக்கள் உருவாக்கப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆராய்ச்சி அமுலாக்கல்களில் விளக்கக் குறைவுகள் அவதானிக்கப்பட்டன. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 11 குழுக்களுக்குரிய விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கடந்த மூன்று வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கிடையே 172 ஆராய்ச்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 72 ஆராய்ச்சிச் செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதிலும் இறுதி அறிக்கை 24 ஆராய்ச்சிகளுக்கு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ஹெக்டர் கொப்கேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,197,979 தொகையான 32 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய இறுதி அறிக்கை (Terminal Report) 2014 திசெம்பர் 31 வரையும் சபைக்குக் கிடைத்திருக்காததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையில் 13 பிரதான செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 20,200,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செலவிடப்பட்ட தொகை ரூபா 6,367,245 ஆக இருந்தது. அதில் 03 செயற்பாடுகளின் நிதிசார் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விஞ்சியிருந்ததுடன் 08 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 30 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

03 வருடங்களுக்குரிய கமநல ஆராய்ச்சி தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய புத்தகத்தில் 1,500 பிரதிகளையும் ஏனைய ஆராய்ச்சி தொடர்பான புத்தகங்களில் 5,500 பிரதிகளையும் அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,943,500 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 1,054,495 பெறுமதியான 4,721 புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. புத்தகங்களை கணிசமான அளவில் அச்சிடுவதற்கான தேவை மற்றும் அதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.3 நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினங்களைச் செய்தல்**

கமநல விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காகக் கிடைத்த நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 46,217 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டம்**

சபையால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தாமையால் மீளாய்வாண்டின் போது மிகைக் கட்டணமாக ரூபா 29,056 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 6,203,000 பெறுமதியான கப் வாகனம் வரிசை அமைச்சின் பயன்பாட்டிற்காக மீளாய்வாண்டின்போது விடுவிக்கப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 31 ஆக இருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 28 ஆனமையால் 02 பதவிநிலைப் பதவிகளும் 01 கனிஷ்ட நிலைப்பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2013 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களிலுள்ள பிழைகள் மற்றும் குறைபாடுகளை சரிசெய்வதற்காக 2014 யூன் 16 ஆந் திகதி அவை மீளப்பெறப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2014 திசெம்பர் 16 ஆந் திகதி கணக்காய்விற்காக மீளச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளுக்கிடையே 22 சதவீதம் முதல் 68 சதவீதத்திற்கடையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதுகாப்பு மதில், வீதி மற்றும் வடிகால் முறைமை, பெயர்ப்பலகை மற்றும் பிரதான வாயிற்கதவு நிர்மாணம் போன்றவை மீளாய்வாண்டின் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்ட செயற்பாடுகளாகும்.

(ஆ) கொள்வனவுத் திட்டத்தில் கணக்கீட்டு மென்பொருளொன்றைத் தயாரித்தல் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 04 செயற்பாடுகளுக்காக ரூபா 1,621,350 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சிச் செலவினம்
(ஆ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) வாகன நிர்வாகம்
(உ) கொள்வனவு நடைமுறைகள்